www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

T

# முதல் பருவத் தொகுத்தறித் தேர்வு - 2024

## ஆறாம் வகுப்பு

## தமிழ்

நேரம்: 2.00 மணி மதிப்பெண்கள்: 60

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10×1=10**

1) தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் ________ சுருங்கிவிட்டது.
   அ) நிலா ஆ) மேதினி இ) வானம் ஈ) காற்று

2) சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி ________
   அ) துருவப்பகுதி ஆ) இமயமலை இ) இந்தியா ஈ) தமிழ்நாடு

3) நுட்பமாக சிந்தித்து அறிவது ________
   அ) நூலறிவு ஆ) சிற்றறிவு இ) நுண்ணறிவு ஈ) பட்டறிவு

4) உடல் நோய்க்கு ________ தேவை
   அ) ஔடதம் ஆ) இனிப்பு இ) உணவு ஈ) உடை

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக:-**

5) நாம் சிந்திக்கவும், சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது ________

6) உலக சதுரங்க வீரரை வெற்றிகொண்ட மீத்திறன் கணினியின் பெயர் ________

7) இந்தியாவின் பறவை மனிதர் ________

**இ) பொருத்துக:- (எதிர்ச்சொற்கள்)**

8) எளிது - விலகு

9) ஐயம் - அரிது

10) அணுகு - தெளிவு

**ஈ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடையளிக்க. 5×2=10**

11) நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள்?

12) தமிழ் ஏன் மூத்தமொழி என்று அழைக்கப்படுகிறது?

13) சொற்களில் ஆய்த எழுத்து எவ்வாறு இடம்பெறும்?

14) எழுத்துகளுக்குத் தொடக்கமாக அமைவது எது?

15) மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது எது?

16) மொழிக்கு முதலில் வரும் உயிர்மெய் எழுத்துகள் யாவை?

17) சிலப்பதிகாரக் காப்பியம் எவ்வெவற்றை வாழ்த்தித் தொடங்குகிறது?

**உ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. 3×4=12**

18) தமிழ்க்கும்மி பாடலின் வழி நீங்கள் அறிந்து கொண்டவற்றை உம் சொந்த நடையில் எழுதுக.

19) சிட்டுக்குருவியின் வாழ்க்கைப் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக?

20) உங்களுக்குத் தெரிந்த மருத்துவ முறைகள் யாவை?

21) துருவப் பகுதிகளில் ஆய்வு செய்ய எந்திர மனிதர்களை அனுப்புவதன் காரணம் யாது?

22) அஃறிணை, பாகற்காய் ஆகிய சொற்களின் பொருள் சிறப்பு யாது?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

T (2) VI தமிழ்

ஊ) பின்வரும் கவிதைப் பகுதியை அடிபிறழாமல் எழுதுக:- 2+4=6

23) "இனிய......" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

24) "தமிழுக்கும்..........." எனத் தொடங்கும் இன்பத்தமிழ் பாடலை எழுதுக.

எ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி:- 10×1=10

25) 'மை' என்னும் எழுத்தில் முடியும் சொற்கள் இரண்டு எழுதுக.

26) ஆய்த எழுத்து இடம்பெறும் இரண்டரை மாத்திரை அளவுள்ள இரண்டு சொற்கள் எழுதுக.

27) தொடர்களைப் பிரித்து இரண்டு தொடர்களாக எழுதுக.
இலக்கியா இனிமையாகப் பாடியதால் பரிசு பெற்றாள்.

28) கலைச்சொல் தருக:- i) Migration ii) Intelligence

29) கலைந்துள்ள எழுத்துகளை முறைப்படுத்துக:-
i) மத்ருதும்வ ☐☐☐☐☐☐ ii) அப்ழைபு ☐☐☐☐

30) வாக்கியத்தை நீட்டி எழுதுக:-
நான் சென்றேன். (ஊருக்கு, பேருந்தில்)

31) பிரித்து எழுதுக.
i) ஒய்வற ii) நிலத்தினிடையே

32) சேர்த்து எழுதுக.
i) எட்டு+திசை ii) தரை+இறங்கும்

33) பொருள் தருக.
i) அசதி ii) இயன்றவரை

34) சொற்றொடரில் அமைத்து எழுதுக:- நாள்தோறும்

ஏ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விரிவான விடையளி:- 1×6=6

35) பறவை இனங்கள் அழியாமல் காப்பாற்றப்பட நாம் செய்ய வேண்டியவைகளைப் பற்றிச் சிந்தித்து எழுதுக.

36) தமக்குப் பெருமகிழ்வு அளித்ததாக அப்துல்கலாம் குறிப்பிடும் நிகழ்வு யாது?

ஐ) கடிதம்/கட்டுரை - ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளிக்க:- 1×6=6

37) "அறிவியல் ஆக்கங்கள்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

38) ஊர்த்திருவிழாவிற்கு செல்ல வேண்டி இரண்டு நாள்கள் விடுப்பு கேட்டு வகுப்பாசிரியருக்குக் கடிதம் எழுதுக.

********